# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 139/மா/2025**

**நாள்: 15.04.2026**

M. ஹரிபாலன்
தஞ்சாவூர் --- முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
தஞ்சாவூர் மாநகராட்சி --- எதிர் மனுதாரர்

தஞ்சாவூர், கீழவாசல், கொள்ளுப்பேட்டைத் தெரு, கதவு எண் 628/18P என்கிற முகவரியில் வசிக்கும் திரு. M. ஹரிபாலன் என்பவரின் 04.04.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 07.04.2025 அன்று பெறப்பட்டு 139/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

தஞ்சாவூர், கீழவாசல், கொள்ளுப்பேட்டைத் தெரு, கதவு எண் 628/18P என்கிற முகவரியில் வசிக்கும் திரு. M. ஹரிபாலன் என்பவர் தனது 04.04.2025 நாளிட்ட மனுவுடன் இணைத்தனுப்பியுள்ள 17.12.2024 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

> "தஞ்சாவூர் காமராஜர் சந்தையில் கடை ஒதுக்கீடு செய்ய ரூ.1,80,000/-. தொகையை, 8 செப்டம்பர் 2022 அன்று, அன்றைய தினம் தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையராக இருந்த திரு. சரவணகுமார் அவர்களின் தலைமைக் காலத்தில் செலுத்தினேன்.
>
> ஆனால், இதுநாள் வரை நான் பணத்தையும், கடையையும் பெறவில்லை. நான் இந்தக் கடையை பெறுவதற்காக கடன் எடுத்துள்ளேன். எனது குடும்பம் தற்பொழுது கடும் பொருளாதார சிக்கல்களையும், மன உளைச்சல்களையும், எதிர்நோக்கி வருகிறது.
>
> உங்கள் துறை சார்ந்த அதிகாரிகள் விரைவாக இந்த விவகாரத்தில் தலையிட்டு, எனது பணத்தை திருப்பிக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறேன். இத்துடன், நான் பணம் செலுத்திய ரசீதையும், ஆதார் கார்டு, குடும்ப அட்டை இவற்றின் நகல்களை இணைத்துள்ளேன்."

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 12.05.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. பிரதிவாதி தரப்பில் தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையாளர் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையினை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்:–

"1. இந்த பிரதிவாதி ஒப்புக் கொள்ளும் சங்கதிகளை தவிர ஏனைய சங்கதிகளை மறுக்கிறார். ஏனைய சங்கதிகளை புகார்தாரரை நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார்.

2. காமராஜ் மார்க்கெட் வணிக வளாகத்தில் ஒரு கடையை குத்தகைக்கு எடுப்பதற்காக மாத உரிம தொகை ரூ.15,000/– (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) என்ற விதத்தில் ஒப்பு கொண்டு ஏலத்தில் பங்கேற்று வட்டியில்லா பாதுகாப்பு வைப்பு தொகையாக புகார்தாரர் செலுத்திய ரூ.2,00,000/–ஐ (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) திருப்பிச் செலுத்தி விட்டதாக பிரதிவாதி சமர்ப்பிக்கிறார்.

3. புகார்தாரர் தான் செலுத்தியிருந்த வட்டியில்லா பாதுகாப்பு வைப்புதொகையான ரூ.2,00,000/– (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) முழுமையாக பெற்றதாக எழுத்துப்பூர்வமாக ஒப்புக் கொண்டுள்ளார். மேற்சொன்ன தொகையை பிரதிவாதியின் கனரா வங்கியிலிருந்து ECS மூலம் 12.05.2025 தேதி அன்று பிரதிவாதியால் புகார்தாரருக்கு செலுத்தப்பட்டுள்ளது.

4. புகார்தாரருக்கு செலுத்த வேண்டிய தொகையான ரூ.1,80,000/– (ரூபாய் ஒரு லட்சத்து எண்பதாயிரம் மட்டும்) என்பதை இந்த பிரதிவாதி ஒப்புக் கொள்கிறார். .(i.e.)அதாவது 12 மாதங்களுக்கு மாத வாடகை ரூ.15,000/– என்ற விதத்தில் ஆக கூடுதல் ரூ.1,80,000/– ஆகும். இது புகார்தாரர் ஏலத்தில் கலந்து கொண்டு வெற்றிபெற முடியாமல் போனதால் காமராஜ் சந்தையில் (KAMARAJ MARKET) எந்த ஒரு கடையும் ஒதுக்கப்படவில்லை என்பதால், பிரதிவாதியால் புகார்தாரருக்கு ரூ.1,80,000/– தொகை திருப்பி செலுத்த சம்மதிக்கிறார்.

5. மேற்சொன்ன ரூ.1,80,000/–ஐ திரும்ப செலுத்துவதற்கான ஏற்பாடுகளை இந்த பிரதிவாதி செய்து வரும் நிலையில் சிறிது காலம் அவகாசம் வழங்க வேண்டுகிறார்.

6. விசாரணையின் போது குறைதீர்ப்பாணையத்தால் கோரப்பட்ட கோப்புகள் மற்றும் பதிவேடுகள் சமர்ப்பிக்கப்படும் என்று இந்த பிரதிவாதி தெரிவிக்கிறார்.

7. எனவே இந்த மன்றத்தில் புகார்தாரர் அளித்த புகாருக்கு, இந்த மாண்புமிகு குறை தீர்ப்பணையம் இந்த விஷயத்தை இணக்கமாக தீர்த்து நீதி வழங்க இந்த பிரதிவாதி வேண்டுகிறார்."

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 25.03.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 27.02.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் மேற்படி விசாரணையில் ஆஜராகவில்லை.

6. இந்நிலையில், தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையாளர் தன்னுடைய 13.03.2026 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

"தமிழ்நாடு உள்ளாட்சி முறைமன்ற நடுவம் முறையீட்டு மனு எண் 139–ல் குறிப்பிட்டுள்ள திரு. மு. ஹரிபாலன் என்பவர், காமராஜ் சந்தை கடைக்கு செலுத்தியுள்ள வைப்புத் தொகை ரூ.1,80,000/–ஐ தனியரது வங்கி கணக்கில் 27.06.2025ம் தேதியில் வரவு வைக்கப்பட்டுள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது."

7. எதிர்மனுதாரர் தரப்பில் தஞ்சாவூர் மாநகராட்சியின் கண்காணிப்பாளர் மற்றும் உதவி ஆணையர் (வருவாய்) (பொ) 25.03.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:-

"மனுதாரர், காமராஜ் மார்க்கெட் வணிக வளாகத்தில் ஒரு கடையை குத்தகைக்கு எடுப்பதற்காக உரிம தொகை ரூ.15,000/– (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) என்ற விகிதத்தில் ஒப்பு கொண்டு ஏலத்தில் பங்கேற்று வட்டியில்லா பாதுகாப்பு வைப்பு தொகையாக செலுத்திய ரூ.2,00,000/–ஐ (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) அன்னாருக்கு திருப்பிச் செலுத்தப்பட்டுவிட்டது.

மனுதாரர் செலுத்தியிருந்த வட்டியில்லா பாதுகாப்பு வைப்புதொகையான ரூ.2,00,000/–ஐ (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்)ஐ முழுமையாக பெற்றதாக எழுத்துப்பூர்வமாக ஒப்புக் கொண்டுள்ளார். மேற்சொன்ன தொகையை பிரதிவாதியின் கனரா வங்கியிலிருந்து ECS மூலம் 12.05.2025 தேதி அன்று தஞ்சாவூர் மாநகராட்சியால் மனுதாரருக்கு செலுத்தப்பட்டுவிட்டது.

மனுதாரர் ஏலத்தில் கலந்து கொண்டு வெற்றிபெற முடியாமல் போனதால் காமராஜ் சந்தையில் (KAMARAJ MARKET) எந்த ஒரு கடையும் ஒதுக்கப்படவில்லை என்பதால், அதற்காக மனுதாரர் செலுத்திய ரூ.1,80,000/– தொகை 27.06.2025 நாளிட்ட காசோலை எண் 101404 மூலம் மனுதாரருக்கு ECS வழியாக 27.06.2025 அன்று மனுதாரர் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கான statement of accounts நகல் முறைமன்ற நடுவர் அவர்களுக்கு சமர்ப்பிக்கிறேன்."

8. முறையீட்டு மனுதாரரின் மனு, தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையாளர் தாக்கல் செய்த எதிர்வழக்குரை, அறிக்கை மற்றும் கண்காணிப்பாளர் மற்றும் உதவி ஆணையரின் (வருவாய்) (பொ) வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

தஞ்சாவூர் காமராஜர் சந்தையில் கடை ஒதுக்கீடு செய்ய ரூ.1,80,000/– தொகை செலுத்தப்பட்டது என்பதும், ஆனால், தனக்கு கடை ஒதுக்கப்படவில்லை மற்றும் தான் செலுத்திய பணமும் கிடைக்கப் பெறாததால், அப்பணத்தை திருப்பிக் கொடுக்க தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையாளருக்கு உத்திரவிடுமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனுவிலிருந்து அறிய முடிகிறது.

மனுதாரர், தஞ்சாவூர் காமராஜ் மார்க்கெட் வணிக வளாகத்தில் ஒரு கடையை குத்தகைக்கு எடுப்பதற்காக மாத உரிம தொகை ரூ.15,000/– (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) என்ற விகிதத்தில் ஒப்புக் கொண்டு ஏலத்தில் பங்கேற்று வட்டியில்லா பாதுகாப்பு வைப்பு தொகையாக செலுத்திய ரூ.2,00,000/–ஐ (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) அன்னாருக்கு திருப்பிச் செலுத்தப்பட்டு, அதனை முழுமையாக பெற்றதாக எழுத்துப்பூர்வமாக ஒப்புக் கொண்டுள்ளார் என்பதும், மேற்சொன்ன தொகையை பிரதிவாதியின் கனரா வங்கியிலிருந்து ECS மூலம் 12.05.2025 தேதி அன்று தஞ்சாவூர் மாநகராட்சியால் மனுதாரருக்கு செலுத்தப்பட்டுவிட்டது என்பதும், மனுதாரர் ஏலத்தில் கலந்து கொண்டு வெற்றிபெற முடியாமல் போனதால் காமராஜ் சந்தையில் (KAMARAJ MARKET) எந்த ஒரு கடையும் ஒதுக்கப்படவில்லை என்பதும், அதற்காக மனுதாரர் செலுத்திய ரூ.1,80,000/– தொகை மனுதாரருக்கு ECS வழியாக 27.06.2025 அன்று மனுதாரர் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது என்பதும் எதிர்மனுதாரரான தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் கண்காணிப்பாளர் மற்றும் உதவி ஆணையர் (வருவாய்) (பொ)–ன் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நிலையில், மனுதாரர் குறிப்பிட்டுள்ள தஞ்சாவூர், காமராஜ் மார்க்கெட் வணிக வளாகத்தில் ஒரு கடையை குத்தகைக்கு எடுப்பதற்காக மனுதாரர் ஏலத்தில் கலந்து கொண்டு வெற்றிபெற முடியாமல் போனதால் காமராஜ் சந்தையில் (KAMARAJ MARKET) எந்த ஒரு கடையும் ஒதுக்கப்படவில்லை என்பதால், அதற்காக மனுதாரர் செலுத்திய ரூ.1,80,000/–ஐ ECS

மூலம் 27.06.2025 அன்று தஞ்சாவூர் மாநகராட்சியால் மனுதாரரின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு மனுதாரருக்கு செலுத்தப்பட்டு விட்டதாக தஞ்சாவூர் மாநராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் கண்காணிப்பாளர் மற்றும் உதவி ஆணையர் (வருவாய்) (பொ)–ன் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளதால், மனுதாரரின் மனு மீது மேல்நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் எழவில்லை என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. M. ஹரிபாலன்,
த/பெ G. முரளீதரன்,
கதவு எண் 628/18P
கொள்ளுப்பேட்டைத் தெரு,
கீழவாசல், தஞ்சாவூர்–613 001.

(2) ஆணையாளர்,
தஞ்சாவூர் மாநகராட்சி,
காந்திஜி சாலை, தஞ்சாவூர்.

(3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

(4) இணை இயக்குநர்/ ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

17/4/26
செயலாளர்.
17/4/26

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032